# HDFC வங்கி

பன்முகப்படுத்தப்பட்ட நிதித் தீர்வுகள் மூலம் சமூகம் அடங்கலாக இலங்கையர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு தங்குமிடம் மற்றும் ஆதரவை வழங்கி, அனைத்து தரப்பினர்களுடன் மூன்று தசாப்தங்களாக தேசத்திற்கு சேவையாற்றி வரும் வங்கியுடன் இணைந்து வங்கித் துறையில் தொழில்சார் முன்னேற்றத்தை நீங்களும் அடைவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

வங்கியானது அதனது அபிவிருத்தி துறையில் புதிய கண்ணோட்டங்களை பட்டயப்படுத்தும் பணியில் உள்ளது.

HDFC வங்கி பின்வரும் பதவியை நிரப்புவதற்காக நிரூபிக்கப்பட்ட சாதனைப்பதிவைக் கொண்ட திறமையான, ஆற்றல் மிக்க மற்றும் பெறுபேறு நோக்கமுடைய நபரொருவரை தேடுகின்றது.

**பிரிவுத் தலைவர் : கடன் மற்றும் மீள அறவிடல் பிரதிப் பொது முகாமையாளர் தரம்**
**HEAD OF CREDIT & RECOVERY** (DGM GRADE)

### பிரதான பொறுப்புகள்

- முழுக் கடன் மற்றும் மீள அறவிடல், உறுதியான செயலாற்றுகை மற்றும் பாதீட்டு இலக்குகளை அடைதல் மற்றும் இதர நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு உரிய மூலோபாய திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளை தயாரித்தல்.
- வங்கியின் கொள்கைகளுக்கு அமைவாக கடன் அறவிடல் மற்றும் இடர் முகாமைத்துவத்தின் மூலம் தரமான கடன் பிரிவொன்றை உருவாக்குதல்
- கடன் மற்றும் அறவிடல் பிரிவின் பணியாள்தொகுதிக்கு உரிய பயிற்சியை வழங்குவதன் மூலம் அவர்களின் திறன் அபிவிருத்தி, நெறிமுறைகள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் வழிகாட்டுதல்களுக்கு இசைவாக்கம் அடைவதை உறுதிப்படுத்துவதன் மூலம் வங்கியில் முறைசார்ந்த கடன் மற்றும் அறவிடல் கலாசாரமொன்றை உருவாக்குதல்.
- தற்பொழுது காணப்படும் கடன் மற்றும் அறவிடல் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை மீளாய்வு செய்தல், குறைபாடுகளை அடையாளங் காணுதல் மற்றும் அறிக்கையிடல், அவற்றை தவிர்ப்பதற்கு உகந்த பரிந்துரைகளை சமர்ப்பித்தல், அவ்வாறான இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பொருத்தமான தீர்வுகளை செயற்படுத்துவதன் மூலம் முழுமையான கடன் மற்றும் அறவிடல் இடர்களை வினைத்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்தல்
- அந்தந்த பிரிவுகளுக்கான சிறந்த பயன்பாடுகளை அடையாளங் காணுதல் மற்றும் மீளாய்வு செய்தல்
- இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற நிர்வாக வரையறைக்கு ஏற்புடைய நிலைத்தன்மையினை உருவாக்குதல்
- அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் அடிப்படையில் ஏற்புடைய நெறிமுறைகள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் கடன் விருத்தியை முகாமைத்துவம் செய்தல்.
- கடன் மற்றும் அறவிடல் நடவடிக்கைகள் தொடர்பாக கிளையின் பணியாட்டொகுதிக்கு பயிற்சி அளித்தல்.

- சந்தை தேவைகளுக்கேற்ற வகையில் நிலவும் கடன் மாதிரிகளை உருவாக்குதல் மற்றும் புதிய மாதிரிகளை அபிவிருத்தி செய்வதற்கு வசதி அளித்தல்.
- கிளை வலையமைப்பினை உள்ளடக்கிய கடன் மற்றும் அறவிடல் பிரிவுக்கு தலைமையேற்றல், கூட்டாண்மை மூலோபாய நோக்குநிலை, கடன் மற்றும் அறவிடல் செயற்பாட்டு முகாமைத்துவத்துக்கு ஒத்துழைப்பு அளிக்கும் இலக்குகளை உருவாக்குதல்

**தேவையான தகைமைகள்**

- வர்த்தக முகாமைத்துவம், நிதியியல், கணக்கீடு, சட்டம், சந்தைப்படுத்தல், பொருளியல் அல்லது இதர ஏற்புடைய துறை சார்ந்ததாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது பூரண தொழில் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
- கடன் முகாமைத்துவம், வர்த்தக முகாமைத்துவம், நிதியியல், சந்தைப்படுத்தல், வங்கியியல் அல்லது இதர ஏற்புடைய ஏதேனுமொரு துறை சார்ந்ததாக முதுகலை பட்டம் பெற்றிருத்தல் மேலதிக தகைமை ஆகும்.
- கடன் மற்றும் அறவிடல் பிரிவுகளை உள்வாங்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனமொன்றில் சேவையாற்றி 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை பெற்றிருப்பதோடு முகாமையாளர் பதவியில் 8 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல்.

**வயதெல்லை – 45 வயதிற்கு கீழே விரும்பத்தக்கது.**

**சரியான அபேட்சகருக்கு கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.**

**விண்ணப்பிக்கும் நடைமுறை**

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 06.12.2023 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.


**HDFC வங்கி**
**சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,**
**தபால் பெட்டி இல 2085**
**கொழும்பு – 02**
**தொலைபேசி இல 0112356800**
www.hdfc.lk